DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **S.T.C.NO. 13/2019**
Deposition of witness for Prosecution **அ.சா.** 2
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | **தர்மலிங்கம்** |
| Father/ Husband Name | : | **முருகேசன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 19.10.2022.

**முதல்விசாரணை**

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் ஒர்க்ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன பன்னீர்செல்வம் எனது நண்பர். அவர் இறந்து விட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். அவர் பல்சர் பைக்கில் சென்றதாகவும் டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் சொன்னார்கள். நான் தேவகோட்டை அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தின் போது எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி பன்னீர்செல்வம் சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீஸ் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொல்லி உள்ளதை தான் நான் சொல்லி உள்ளேன்.

மறு விசாரணை: இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-). ஆர்.எம்.மாரிமுத்து
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **S.T.C.NO. 13/2019**
Deposition of witness for Prosecution **அ.சா.** 3
Defence
Court

Name : சுப்பிரமணி
Father/ Husband Name : சாத்தையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 19.10.2022.

**<u>முதல்விசாரணை</u>**

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் மன்னன்வயல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு மருத்துவமனையில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.**2).

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 16.07.2018ம் தேதி தேவகோட்டை வாரச் சந்தை அருகே வைத்து சம்பவ இடத்தில் கையெழுத்து செய்து விட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன். என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**(ஒம்/-). ஆர்.எம்.மாரிமுத்து**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **S.T.CNO. 13/2019**
Deposition of witness for Prosecution அ.சா. 4
Defence
Court

Name : மருது
Father/ Husband Name : சுப்பிரமணி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 19.10.2022.

**முதல்விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன். நான் மன்னன்வயலில் குடியிருந்து வருகிறேன். நான் 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். நானும எனது அப்பாவான அ.சா.3ம் தேவகோட்டைக்கு போய் கொண்டிருக்கும் போது ஒத்தக்கடை வாரச்சந்தை அருகே கடந்த 4 வருடங்களுக்கு முன்பு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.3**).

**எதிரி தரப்பில குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்றால் சரிதான். பார்வை மகஜர் தயார் செய்யும் போது எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் 4 போலீசார் இருந்தார்கள். பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் போலீசாரிடம் நான் கேட்டதால் அவர்கள் கையெழுத்து போடச்

சொன்னதால் போட்டேன். இறந்தவர் எனது சித்தி மகன் என்பதால் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போடாமல் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**

**இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-). ஆர்.எம்.மாரிமுத்து
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.